# அசோக மகாராஜன்

க. அ. நீலகண்ட சாஸ்திரி

அசோக மகாராஜன் சுமார் இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட வீரன்; மௌரிய வம்சத்தில் உதித்தவன். அவன் தன்னுடைய இளமைப் பருவத்தில் மாளவ நாட்டில் உஜ்ஜயினியிலும் காந்தார நாட்டில் தக்ஷசிலையிலும் சில காலம் யுவராஜாவாக ஆண்டான். உஜ்ஜயினியில் அரசு புரியும் காலத்தில் தேவி என்னும் ஓர் அழகிய செட்டிப் பெண்ணை மணந்தான். மஹேந்திரன் என்ற புதல்வனையும் சங்கமித்திரை என்ற புதல்வியையும் தேவி ஈன்றாள். அவ்விருவரும் சிறு பிராயத்திலேயே உலகு துறந்து சாக்கியத் துறவிகளாயினர். பிறகு இலங்கைத் தீவிற்குச் சென்று அங்கே புத்த மதத்தை ஸ்தாபித்தனர். தேவியும் நாளடைவில் தன் சொந்த ஊரான விதிசா நகரத்தின் அருகில் ஒரு விஹாரத்தைக் கட்டிச் சாக்கிய பிக்ஷுக்களுக்கு உதவித் தானும் தனது முதுமைப் பருவத்தில் அங்கேயே வசித்து வந்தாள். அசோகனுக்கு வேறு மனைவிகளும் மக்களும் இருந்தார்கள். அவர்களில் திஷ்யரக்ஷிதை என்ற ராணியையும் அவள் மாற்றாள் மகன் குணாலனையும் இக்காலத்தில் 'அசோக் குமார்' என்னும் சினிமாப் படத்தின் வாயிலாகத் தமிழர் எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கலாம்.

அசோகனுடைய ஜீவிய சரித்திரத்தையும் அவன் காலத்து அரசாட்சி முறைகளையும் நாகரிக நிலையையும் விரித்துக் கூறப் புகுந்தால் அவை ஒரு தனிப் புத்தகமாகிவிடும்; அப்பேரரசனுடைய பல நற்குணங்களில் மிகச் சிறந்ததான அஹிம்ஸையைப்பற்றி மாத்திரம் அவனுடைய கல் வெட்டுக்களின் உதவியைக் கொண்டே சில கருத்துக்களை வெளியிடலாமென்பது தான் இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

முதலில் நமக்குச் சிறந்த ஆதாரமாயிருக்கும் கல் வெட்டுக்களைக் குறித்துக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். அசோகனுடைய தலைநகரம் மகத நாட்டில் கங்கையும் சோணையும் கூடும் இடத்தில் ஏற்பட்டிருந்த பாடலிபுரம். ஆகையால் அவனுடைய கல்வெட்டுச் சாஸனங்களெல்லாம் முதல் முதல் அவ்வூரிலுள்ள அமைச்சர்களால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். இதற்கிணங்கவே எல்லாச் சாஸனங்களும் மகத நாட்டில் வழங்கி வந்த மாகதி என்னும் பாகத மொழியிலேயே காணப்படுகின்றன. ஆனால் ஒரே பாஷையைப் பல நாட்டு ஜனங்கள் பேசும்போது உச்சரிப்பில் வேறுபாடுகளும் திசைச் சொற்களின் கலப்பும் ஏற்படுவது வழக்கமென்பதை நாம் இப்பொழுதும் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவா? அக்காலத்திலும் மொழி நடையின் போக்கு இதே மாதிரிதான் இருந்ததென்பதை இக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. இதுகாறும் கிடைத்திருக்கும் அசோக சாஸனங்களின் எண்ணிக்கை முப்பத்து மூன்று. அவைகளில், இரண்டு சாஸனங்களுக்கு இரண்டு பிரதிகளும், இருபத்திரண்டு சாஸனங்களுக்குப் பல பிரதிகளும் கிடைத்திருக்கின்றன. எஞ்சியவைகளுக்கு ஒரு பிரதி மட்டுமே உள்ளது.

இந்தச் சாஸனங்களில் காணப்படும் கால வரையறைகளெல்லாம் அசோகனுடைய மகுடாபிஷேக வருஷத்திலிருந்து கணக்கிடப்படுகின்றன. அவ்வபிஷேகம் புத்தருடைய பரிநிர்வாணத்திலிருந்து 218 வருஷங்களுக்குப்பின் நடந்ததாகப் பௌத்தர்களுடைய சரித்திர நூல்களினின்று அறிகிறோம். புத்தர் பரிநிர்வாணம் அடைந்த வருஷம் கி.மு. 483 என்பர்; ஆகவே அசோகனுடைய அபி

ஷேகம் நடந்த வருஷம் கி. மு. 265 ஆகும்.

அசோகனுடைய சாஸனங்களின் விவரங்களும் அவைகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களும் பின் வருமாறு:

(1) பாராபர் குகைகளிலுள்ள தான சாஸனங்கள்: பாராபர் மலையானது மகத நாட்டில் கயை என்னும் பிரஸித்திபெற்ற க்ஷேத்திரத்திற்குப் பதினைந்து மைல்களுக்கு வடக்கே உள்ளது. அம்மலையில் பல செயற்கைக் குகைகள் இருக்கின்றன. அவைகளில் மூன்று, அசோகனால் ஆஜீவகத் துறவிகளுக்காக அமைக்கப்பெற்றன. இது அக்குகைகளில் உள்ள சாஸனங்களால் விளங்குகிறது. இம்மூன்று சாஸனங்களில் இரண்டு அரசன் அபிஷேகத்தினின்றும் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகும், மற்றொன்று பத்தொன்பது வருஷங்களுக்குப் பிறகும் பொறிக்கப் பெற்றன.

(2) பாறைச் சாஸனங்கள்: சிறியவை இரண்டு; அபிஷேகத்தினின்றும் பதின்மூன்றாவது வருஷத்தில் வெளியிடப்பட்டவை. முதல் சாஸனம் மிகவும் முக்கியமானது. இதில் அசோகன் தான் புத்த மதத்தைத் தழுவியிருப்பதையும் அதன் பயனாக உலகத்தாருக்குத் தர்ம வழிகளை உபதேசித்துச் சமூக வாழ்க்கையை மேம்படுத்தத் தான் கருதியிருப்பதையும் வெளியிடுகிறான். இந்தச் சாஸனம் வட இந்தியாவில் மூன்று இடங்களில் இருக்கிறது. அவையாவன: பைராட் (ஜயபுரம்), ஸஹஸ்ராம் (பிஹார்), ரூப்நாத் (மத்திய மாகாணங்கள்) என்னும் இடங்கள். இன்னும் நிஜாம் ராஜ்யத்தில் மூன்று இடங்களிலும் (மாஸ்கி, பால்கிகுண்டு, காவிமட்), மைசூர் ராஜ்யத்தில் மூன்று இடங்களிலும் (ப்ரம்மகிரி, சித்தாபுர, ஜதிங்க ராமேசுவரம்), கர்னூல் ஜில்லாவில் குத்திக்கோட்டைக்கு எட்டு மைல் தூரத்திலுள்ள எர்ரகுடி என்னும் கிராமத்திலும் காணப்படுகிறது. கடைசியாகக் குறிப்பிட்ட நான்கு ஊர்களிலும் இந்தச் சாஸனத்துக்கு அனுபந்தமாக மற்றொரு சிறு சாஸனமும் இருக்கிறது. இது இதர இடங்களில் அகப்படவில்லை.

(3) கல்கத்தா - பைராட் பாறைச் சாஸனம்: ஒரே பிரதி. இதைப் பழைய புஸ்தகங்களில் 'பாப்ரூ' சாஸனம் என்று வழங்கினார்கள். ஆனால் இது இராஜபுதனத்திலுள்ள ஜயபுர ராஜ்யத்தைச் சார்ந்ததும் நாம் முன்னமே (2)ன் கீழ்க் குறிப்பிட்டதுமான பைராட் என்னும் ஊரில் அகப்பட்டது. இப்போது கல்கத்தாவில் 'ஆசியாடிக் சொஸைடி'யில் பாதுகாக்கப்பட்டுவருகிறது. ஆகையால் இதைக் கல்கத்தா - பைராட் சாஸனம் என்று வழங்குவது உசிதம். இதில் அசோகன் புத்த பிக்ஷுக்களின் சங்கத்தாரைத் தங்கள் மதநூல்களில் குறிப்பிடப்பட்ட ஏழு பகுதிகள் அவர்கள் விசேஷமாகக் கவனித்துத் தியானம் செய்யவேண்டியவை என்று குறிப்பிடுகிறான்.

(4) பதினான்கு பாறைச் சாஸனங்கள்: அசோகனுடைய அபிஷேகத்தினின்றும் பதினாலாவது வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டன. இவைகளைத் 'தம்ம லிபிகள்' என்று அசோகனே குறிப்பிடுகிறான். இவைகளில் தன் மனப்பாங்கில் ஏற்பட்ட வேறுபாடுகளையும், தான் தர்மத்தைத் தழுவிய பிரகாரத்தையும், எல்லோராலும் அனுசரிக்கப்பட வேண்டிய தர்மத்தின் சொரூபத்தையும் அசோகன் விரிவாகக் கூறுகிறான். இச் சாஸனங்களின் ஒரு துணுக்கு, பம்பாய்க்கு அருகில் உள்ள ஸொபாராவில் (பழைய காலத்தில் சூர்ப்பாரகம் என்று வழங்கிய துறைமுகம்) அகப்பட்டது. மற்றப்படி ஏறக்குறைய எல்லாச் சாஸனங்களும் கர்னூல் ஜில்லா எர்ரகுடி, கூர்ஜ்ஜர தேசத்துக் கிர்நார், இந்தியாவின் வடமேற்கெல்லை மாகாணத்தில் ஷாபஸ்கர்ஹி மான்ஷேரா என்னும் இரண்டு ஊர்கள், ஐக்கிய மாகாணங்களில் டேராடூன் ஜில்லாவிலுள்ள கால்ஸி, கிழக்கே கலிங்க நாட்டில் பூரி ஜில்லாவில் தௌலி, கஞ்சம் ஜில்லாவில் ஜௌகடா: ஆகிய இவ்வேழு ஊர்

களில் பெரிய பாறைகளில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் கலிங்க நாட்டு இரண்டு ஊர்களில் மட்டும் மூன்று சாஸனங்கள் (11-13) இல்லை. அவைகளுக்குப் பதிலாக வேறு இரண்டு சாஸனங்கள் உள்ளன.

(5) கலிங்க நாட்டுக்குத் தனித்து உரிய இரண்டு சாஸனங்கள்.

(6) நேபாளநாட்டுக்கு அருகில் புத்த பகவானுடைய பிறப்பிடமான உலும்பினி வனத்திலும் நிகலிசாகர் என்ற இடத்திலும் இரு கற்றூண்களில் பொறிக்கப்பட்ட அசோக சாஸனங்கள். இவை அபிஷேகத்துக்கு இருபது வருஷங்களுக்குப்பின் பிரசுரமானவை.

(7) ஏழு தூண் சாஸனங்கள்: இவை பதினான்கு பாறைச் சாஸனங்களைப்போலவே தர்ம விஷயங்களை விளக்குவன. இவை அபிஷேகத்துக்கு 26, 27 வருஷங்களுக்குப் பின் வெளியிடப்பட்டன. ஏழாவது சாஸனத்தில் அசோகன் தான் செய்த தர்ம காரியங்களெல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகிறான். இதற்கு ஒரே பிரதி தான் உள்ளது. எஞ்சியவைகளுக்கு ஆறு பிரதிகள் உண்டு. அவையெல்லாம் வட இந்தியாவில் பல இடங்களில் உள்ள தம்பங்களின்மீது பொறிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு தம்பத்தில் மாத்திரம் இந்த ஆறு சாஸனங்களைத் தவிர வேறு இரண்டு சிறு கல்வெட்டுக்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று ராணியின் கல்வெட்டு என்று வழங்கப்படும். ஏனென்றால், அது அசோகனுடைய இரண்டாவது தேவியும் தீவலனின் தாயுமான காலுவாகி என்ற ராணியின் தானங்களைக் குறித்த சாஸனம். மற்றொன்று அடுத்த (8) தலைப்பின் கீழ்க் குறிக்கப்படும் சாஸனத்தின் பிரதி.

(8) இது புத்த சங்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பது. சங்கத்தில் வேற்றுமையும் சச்சரவும் உண்டாக்கும் பிக்ஷுக்களுக்குச் சங்கத்தினின்றும் பஹிஷ்காரம், அதாவது காஷாயத்தை உடுத்தாது வெள்ளை ஆடை உடுத்து விஹாரத்துக்கு வெளியே வசிப்பதைத் தண்டனையாக விதிக்கிறது, இச்சாஸனம். இதற்கு, முற்கூறிய கோசாம்பிப் பிரதியைத் தவிர, இன்னும் இரண்டு பிரதிகள் உண்டு. அவை விதிசா நகருக்கு அருகிலுள்ள சாஞ்சியிலும், காசிக்குச் சமீபமான ஸாரநாத் என்னுமிடத்திலும் காணப்படுகின்றன.

இது வரையில் அசோகனுடைய சாஸனங்களின் தன்மையையும் அவைகளின் இருப்பிடங்களையும் சுருக்கமாகச் சொன்னோம். இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயம், அதாவது அசோகனது அஹிம்ஸையையும் காருணியத்தையும் பற்றி இந்தச் சாஸனங்களால் நாம் அறிந்து கொள்ளக் கூடியவற்றைச் சிறிது உற்று நோக்குவோம்.

மேலே (4)-ஆம் தலைப்பின் கீழ்க் கூறப்பட்ட பதினான்கு பாறைச் சாஸனங்களில் பதின்மூன்றாவதே இந்த ஆராய்ச்சிக்குத் தகுந்த முன்னுரையாகும். அது பின் வருமாறு:

> "அமரர் அன்பன் காட்சிக் கினியன்* (ஆன அசோகன்) அபிஷேகம் நடந்து எட்டு வருஷங்களுக்குப் பிறகு கலிங்கத்தை ஜயித்தான். அப்போது அந் நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டவர்களின் தொகை 150,000; கொல்லப் பட்டவர்கள் 100,000; மாண்டவர்களின் சங்கியை அதினும் பல மடங்கு.
>
> "அதன் பிறகு, கலிங்க நாட்டைக் கைப்பற்றிய பிறகு, அமரர் அன்பனுக்குத் தர்மத்தைக் கேட்பதிலும் தர்மத்தை விரும்புவதிலும் தர்மத்தை உபதேசிப்பதிலுமே நோக்கம். இதுதான் கலிங்க ஜயத்தின்

---

* இவை தேவாநாம்பிய, பியதஸி என்ற பட்டங்களின் மொழிபெயர்ப்பு. அசோகன் என்னும் பெயர் மாஸ்கி சாஸனம் ஒன்றில் மட்டுமே காணப்படுகிறது; மற்ற எல்லா இடங்களிலும் இவ்விரண்டு பட்டங்களுமே வருகின்றன.

பின் அவனுக்கு ஏற்பட்ட பச்சாத்தாபம்.

"ஏனெனில், முன் ஜயிக்கப் படாத நாடொன்றை ஜயிக்கும்போது ஏற்படும் கொலையும், சாவும், ஜனங்களின் வெளியேற்றமும் மிக்க துன்பத்தையும் பரிதாபத்தையும் விளைவிப்பன என்பது அமரர் அன்பனுடைய எண்ணம். இவைகளைக் காட்டிலும் வருந்தத்தக்கது என்னவென்றால்: அங்கே வாசம் செய்து பெரியோர்களை வழிபட்டும், தாய் தந்தையரைப் பேணியும், ஆசிரியர்களுக்குப் பணி செய்தும், மித்திரர்களிடத்தும் பழகியவரிடத்தும் இன்னும் சகாக்கள், பந்துக்கள், தாஸர்கள், வேலைக்காரர்கள் ஆகியவர்களிடத்தும் அவரவருக்குத் தக்கவாறு நடந்துகொண்டும், திடமான பக்தி வாய்ந்தவர்களாயிருக்கிற பிராமணர்களுக்கும் சிரமணர்களுக்கும் மற்ற மதஸ்தர்களுக்கும் கிருகஸ்தர்களுக்குங் கூடக் காயமும் கொலையும் உற்றார் வியோகமும் ஏற்படுவதே. ஒருவேளை அவர்கள் நன்கு பாதுகாக்கப்பட்டபோதிலும், அவர்களுடைய அன்புக்குரிய மித்திரர்கள், சகாக்கள், பந்துக்கள் முதலியோருக்கு ஏற்படும் தீங்குகளும் அவர்களுக்கு ஏற்படுவனவேயாம். இவ்வாறு கஷ்டங்கள் யாவரையும் சாருவதைக் குறித்து அமரர் அன்பன் மிகவும் வருந்துகிறான்.

"யவனருடைய நாடுகளைத் தவிர, பிராமணர் சிரமணர் என்ற இவ்விரு வகுப்பினர் இல்லாத நாடு யாதொன்றுமே இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் எல்லா இடங்களிலும் மனிதர் ஏதோ ஒரு மதத்தை அனுஷ்டிக்கிறார்கள். ஆகையால் கலிங்க நாட்டை ஜயிக்கும் சமயத்தில் எத்தனை பேர் கொலையுண்டு செத்தும் நாடு மாறியும் போனார்களோ அவர்களில் நூறில் ஒரு பங்கு அல்லது ஆயிரத்தில் ஒரு பங்குப் பேர்களுக்கு இப்போது அம்மாதிரி சம்பவங்கள் நேர்ந்தாலும் அதனால் அமரர் அன்பனுக்கு மிகுந்த மன வருத்தம் ஏற்படும்."

இன்னும் சாஸனம் முடியவில்லை. அதன் பிற்பகுதியைத் தருவதன் முன், இதுகாறும் இச்சாஸனத்தால் விளங்கும் விஷயங்களைச் சற்றுக் கவனிப்போம். அசோகன் பட்டம் பெற்ற காலத்தில் மௌரியரின் ஏகாதிபத்தியம் இந்தியாவில் அநேகமாய் எல்லா இடங்களிலும் பரவியிருந்தும், கலிங்க நாடு அதற்கு வெளியே சுதந்தர நாடாய் நின்றது. இதைப் பொறுக்க மாட்டாமல் அசோகன் கலிங்கத்தையும் தன் அரசாட்சிக்கு உள்ளாக்க வேண்டுமென்று எண்ணி அதை ஜயிக்கப் படையெடுத்துச் சென்றான். கலிங்கப் படைகளின் எதிர்ப்பு, பலமாக இருந்திருக்கவேண்டும். யார்தாம் தங்களால் இயன்ற மட்டும் போராடாமல் தங்கள் சுதந்தரத்தை இழக்கச் சம்மதிப்பார்கள்? ஆனால் இப்படையெழுச்சியில் நடந்த போர்களின் விவரம் ஒன்றும் தெரியவில்லை. மொத்தமாக உயிர்ச்சேதமும் கஷ்ட நஷ்டங்களும் இரு திறத்தாருக்கும் மிக அதிகமென்று மட்டும் சாஸனத்தால் அறிகிறோம். கடைசியாக அசோகன் ஜயித்தான். பிரபலமான மௌரியசாம்ராஜ்யம் எங்கே, கலிங்கத்தைப் போன்ற ஒரு தனிநாடு எங்கே! ஆயினும் ஜயத்தால் அசோகனுக்குச் சந்தோஷம் இல்லை. கோரயுத்தங்களின் கொடுமைகளை நினைந்து வருந்தி, துன்பக் கடலில் மூழ்கி, பின் தம்மமென்னும் படகைத் தேடிப்பிடித்தான்: அதாவது, கருணையும் சாந்தியும் நல்லொழுக்கமும் நிறைந்த புத்த தர்மம்.

அப்படித் தம்ம மார்க்கம் தெரிந்தும், அதைக் கைப்பற்றுதல் முதலில் எளிதாக இருக்கவில்லை. ஒரு வருஷ

காலத்திற்கு மேல் வீணைப் போக்கி விட்டதற்காக வேறொரு சாஸனத்தில் மிகவும் ஏங்குகிறான் அசோகன். பிறகு பிக்ஷுக்களின் சங்கத்திற்குச் சென்று அவர்களுடன் அளவளாவினான். அதன் பயனாகத் தம்மப் பற்று அவனுக்கு அதிகரிக்க, அவன் வெகு ஊக்கத்துடன் தம்மப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தான். இந்த விவரங்கள் சிறு பாறைச் சாஸனத்தில் காணப்படுகின்றன.

அசோகன் தம்மப் பயிற்சியில் ஈடுபட்டதன் பயனாக, அவனுடைய அரசியல் முறையும் ஜீவித நோக்கமும் அடியோடு மாறிவிட்டன. அயல் நாடுகளோடு சண்டையிடுவதில்லை என்ற விரதத்தை மேற்கொண்டான். தன் பிள்ளைகளும் பேரன்களும் அவ்விதமே நடக்கவேண்டுமென்று கருதினான். இம்மைச் சுகங்களையும் பெருமித வாழ்வையும் பெரியனவாக மதிப்பதை விட்டு மறுமைப் பேரின்பம் தரத்தக்க ஒழுக்கமே மேலானதென்று தான் உணர்ந்தது மட்டுமன்றி, தன் அரசியலதிகாரிகளும் அவர்களால் ஆளப்பட்டு வந்த பிரஜைகளும் உணருவதற்கு உண்டான உபாயங்களை இடைவிடாது தேடிவந்தான். பிரஜைகள் பிழை செய்தாலும் கூடியவரை தான் பொறுமையாக இருந்து கடிய முறைகளைக் கையாளாமலே அவர்களைச் சீர்திருத்த எத்தனித்தான். யுத்தத்தில் ஜயித்து நாடுகளைக் கைப்பற்றுவதைவிடத் தம்ம விஜயத்திற்குப் பாடுபடுவதே யதார்த்தமான ஜயம் என்ற எண்ணத்தைக் கடைப்பிடித்தான். அதற்கிணங்க அயல் நாடுகளுக்குப் படைகளை அனுப்பி வெறுப்பையும் பீதியையும் கஷ்டத்தையும் உண்டு பண்ணுவதற்குப் பதிலாக, தர்மோபதேசம் இனிமையாகச் செய்து ஜனங்களுடைய அன்பையும் அரசர்களுடைய ஆதரவையும் பெறக்கூடிய தூதர்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பிவைத்தான். தற்காலச் சமாதானவாதிகளைப்போல் செயலற்றவன் அல்ல அசோகன். அவன் ஒரு பெரிய சக்கரவர்த்தியாதலால், தன் லக்ஷ்யத்தை இந்தியா முழுவதிலும் அமுலுக்குக் கொண்டு வந்தான். ஆகவே தான் நேரில் முன் நின்று ஒரு போர் நடத்தியதும், யுத்தத்தினால் மனித வாழ்க்கைக்குச் சீர் குலைவும் துன்பங்களும் தன்னால் மறுபடி ஒருகாலும் ஏற்படவே கூடாது என்று திடமாகத் தீர்மானித்து அத் தீர்மானத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் நிறைவேற்றி வந்த தீரன் அசோகன். தற்காலத்தில் யுத்தத்தை அற வெறுத்து யுத்தத் தளவாடங்களுக்காகவும் யுத்தப் பயிற்சிக்காகவும் ஏராளமான பொருளையும் பிரயத்தனத்தையும் அரசாங்கங்கள் வீணாகத் தொலைப்பதைக் கண்டித்து வரும் சமாதானவாதிகளுக்குக் (இவர்களை ஆங்கிலத்தில் 'பாஸிபிஸ்ட்' என்பர்) குருவாகத் தகுந்தவன் அசோகன். இவற்றையெல்லாம் இச்சாஸனத்தின் பிற்பகுதி நன்றாக விளக்கும். அது பின்வருமாறு:

"தனக்குத் தீங்கு செய்வோரைக் கூட இயன்ற அளவில் மன்னித்துவிட வேண்டுமென்றே கருதுகிறான் அமரர் அன்பன். அவன் தன் ராஜ்யத்தில் வாழும் காட்டு ஜனங்களைக் கூடத் தன் வேண்டுகோளால் நல்வழிக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறான். அவர்கள் குற்றம் செய்தால், அவர்கள் நல்வழிப்படுமாறு அவர்களைத் தண்டனை செய்வதனால் தனக்கு மன வருத்தம் இருந்தாலும் அதைச் செய்யாமல் இருக்க முடியாது. ஆகையால் அவர்கள் தாமாகவே தீய காரியங்களைச் செய்யாதிருக்க வேண்டும். எல்லோரிடத்தும், இன்னா செய்யாமையையும், அடக்கத்தையும், ஆத்திரத்திலுங்கூட நடு நிலைமையையும் விரும்புகிறான்.

"தம்ம விஜயத்தையே முக்கியமாகக் கருதுகிறான் அமரர் அன்பன். அவன் இந்தத் தம்ம விஜயத்தை இந் நாட்டிலும் அடுத்த நாடுகளிலும் பல

முறை பெற்றிருக்கிறான்; அதாவது அறுநூறு யோஜனை தூரத்திற்கு அப்பால் யவன அரசன் அந்தியோகன் அரசு புரியும் நாட்டிலும், அவனுக்குமப்பால் துருமய, அந்திகினி, மக, அலிகசுதர என்ற நான்கு அரசர்களுடைய நாடுகளிலும்*, தெற்கே தாம்ரபர்ணி வரைக்கும் சோடர்களும் பாண்டியர்களும் அரசு புரியும் நாடுகளிலும் அப்படியே. அதேமாதிரி இந்த (ஸாம்) ராஜ்யத்திலும் யவனர், காம்போஜர், நாபகர், நாபிதிகள், போஜர், பிதிநிகர், ஆந்திரர், பலிதர் முதலிய எல்லா ஜாதியாரும் அமரர் அன்பன் காட்டுகிற தம்ம வழியைக் கைப்பற்றுகிறார்கள்.

"அமரரன்பனுடைய தூதர் செல்லாத இடங்களிலும் ஜனங்கள் அவனுடைய தர்ம வார்த்தைகளைக் கேள்வியால் தெரிந்து தர்ம வழியைக் கைக்கொள்ளுகிறார்கள்; இன்னும் அப்படியே செய்வார்கள். இப்படி எங்கும் பலதடவையாகப் பெற்றிருக்கும் ஜயம் ப்ரீதி ரஸத்தை உண்டு பண்ணுகிறது. தர்ம விஜயத்தினால் எனக்கு ப்ரீதி தான்; ஆனால் இது பெரிதன்று. மறுமைப் பயனே பெரிதென்று கருதுகிறான், அமரர் அன்பன். இந்தத் தர்மலிபி எழுதப்பட்டது, என்னுடைய புத்திரரும் ப்ரபௌத்திரரும் புதிதாக நாடுகளை ஜயிக்க எண்ணக்கூடாது என்பதற்காகவே; ஜயிக்கப் புகினும் கருணையையும் எளியனவான தண்டனைகளையுமே அவர்கள் கையாண்டு, தர்ம விஜயமே முக்கிய ஜயம் என்று நினைக்க வேண்டும். இந்த ஜயம் இம்மையிலும் மறுமையிலும் பயன் தரும். இதர இன்பங்களை ஒதுக்கித் தர்மத்தை வளர்க்கும் இன்பமே அவர்களுக்கு இருக்கட்டும்; அது தான் இருமைக்கும் நலம்."

கலிங்க வெற்றிக்குப் பிறகு அசோகன் புத்த மதத்தைத் தழுவிப் புத்த பிக்ஷுக்களிடம் தர்மம் கேட்டுத் தன் வாழ்க்கை முறையையும் அரசியல் நோக்கங்களையும் அடியோடு மாற்றிக் கொண்டான் என்பது திண்ணம். இதை மறுப்பவர் சிலர், அவன் அடிக்கடி தர்மத்தையும் சுவர்க்கத்தையும் பற்றிப் பேசுவதன் தத்துவத்தை உணராமல், அவன் வைதிக மதத்தை அவற்றைக்கொண்டே அநுசரித்தான் என்பர். இது தவறு. நாம் பகவத் கீதையைக் கொண்டாடுவது போல் பௌத்தர்களால் கொண்டாடப் பெற்ற 'தம்மபதம்' என்ற நூலின் ஒரு வரியே போதும், இந்த வாதத்தை அடக்குவதற்கு; அதாவது: நன்மை செய்தார் சுவர்க்கம் பெறுவர், ஆசை அறுத்தோர் நிர்வாணமடைவர் என்பதுதான். புத்தருடைய மதமும் நம் நாட்டில் பிறந்து வளர்ந்ததே. நாம் புத்தமதத்தைப் புறச் சமயமாகக் கருதியோ, அசோகனைப் பௌத்தன் என்று ஒப்புக்கொண்டால் ஹிந்து மதத்திற்கு ஏதோ குறைவு நேர்வது போல் எண்ணியோ, அவன் புத்தமதத்திற்கு ஒரு பேரணியாய் விளங்கினான் என்பதை மறுக்கலாகாது.

அசோகன் பௌத்தன்; ஆயினும் பிற மதங்களை வெறுக்காதவன். சிரமணர்களுடன் பிராமணரிடத்தும் மற்றும் வேறு மதப் பற்றுகளுள்ளவரிடத்தும் அவனுக்கு இருந்த அபிமானமும் மரியாதையும் நாம்மேலே காட்டியிருக்கும் சாஸனத்திலிருந்தே ஊகித்து அறியலாம். ஆனால் வேறு இடங்களில் இதை இன்னும் வெளிப்படையாக எடுத்துச் சொல்லுகிறான், அசோகன். ஏழாவது பாறைச் சாஸனத்தின் ஆரம்பம் பின் வருமாறு:

* இவ்வைந்து அரசரும் சிரியா, எகிப்து, மாஸிடோனியா, கைரீனி (எகிப்துக்குமேற்கே), கோரிந்த் என்ற கிரேக்கநாடுகளை அக்காலம் ஆண்டனர்.

"அமர ரன்பன், காட்சிக்கு இனியன், ராஜா எங்கும் எல்லாச் சமயத்தாரும் வசிக்க வேண்டுமென்று விரும்புகிறுன். அச் சமயங்களெல்லாம் அடக்கத்தையும் மனத் தூய்மையுமே விரும்புகின்றன."

அதே தொகுதியில் பன்னிரண்டாவது சாஸனத்தின் தொடக்கம் இதை இன்னும் தெளிவாகக் கூறுகிறது:

"அமர ரன்பன், காட்சிக்கு இனியன், ராஜா எல்லா மதங்களிலும் உள்ள துறந்தவரையும் கிருகஸ்தர்களையும் பூஜிக்கிறுன்; அவர்களைத் தானங்களாலும் மற்றுமுள்ள மரியாதைகளாலும் பூஜிக்கிறுன். ஆனுல் அவன் இந்தத் தானங்களையும் பூஜையையும் பெரியனவாக எண்ணவில்லை. எல்லா மதங்களுடைய சாராம்சத்தையும் விருத்தி செய்வதே பெரிது. இதைப் பலவாருகச் செய்யலாம். ஆயினும் இதற்கு அடிப்படையாக உள்ளது பேச்சில் அடக்கம்: அதாவது சந்தர்ப்பமின்றித் தன் மதத்தைத் துதித்தலும் பிற மதங்களை நிந்தித்தலும் கூடாவென்பதும், சந்தர்ப்பம் வாய்த்த போதும் இந்தத் துதியையும் நிந்தையையும் மிதமாகச் செய்ய வேண்டுமென்பதுமே. அவ்வச் சந்தர்ப்பங்களில் பிற மதங்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்தே தீர வேண்டும். அப்படி ஒருவன் செய்தால் அவன் தன் மதத்திற்கும் பிற மதங்களுக்கும் நன்மை செய்தவன் ஆவான்; இதுவல்லாமல் வேறு செய்பவன் தன் மதத்திற்கும் பிற மதங்களுக்கும் கேடு செய்தவனே ஆவான். ஏனென்ருல், எவனெருவன் தன் மதப் பற்றினுல் அம்மதத்தை மேன்மைப்படுத்துவதாக எண்ணித் தன்னுடைய மதத்தைச் சிலாகித்துப் பிற மதங்களை நிந்திக்கிருனே, அவன் அப்படிச் செய்வதால் தன்னுடைய மதத்திற்குப் பெருத்த கேடு விளைவிக்கிருன். ஆகையால் ஒற்றுமையே நல்லது; அதாவது ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய தர்மங்களைக் கேட்டு அவைகளின்படி ஒழுகவேண்டும். எல்லா மதங்களைச் சார்ந்தவரும் மிக்க கேள்வியினராகவும் நல்ல ஆகமங்களைக் கடைப்பிடித்தவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதுதான் அமர ரன்பனுடைய விருப்பம்."

எவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது பாருங்கள் இந்த உபதேசம்! அக்காலத்துக்கு மட்டுமல்ல; இக்காலத்துக்கும், ஏன், எக்காலத்துக்கும் எல்லா இடங்களுக்குமே. பிறருக்கு உபதேசம் செய்வது எளிது என்கிறுர் ஒரு மஹா கவி. ஆனுல் அசோகன் வெறும் உபதேசத்தால் மட்டும் திருப்தியடைந்தவனல்ல; அந்த உபதேசத்திற்கேற்ப நடந்து காட்டினவன். தான் பௌத்தனுயிருந்தும் ஆஜீவகத் துறவிகளுக்கு அவன் நேர்த்தியான குகைகள் அமைத்துக் கொடுத்தான். தான் அப்படி நடந்தது மட்டுமன்றி, ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் அரசாட்சி முழுமையும் அதே ரீதியாய் நடக்கும்படி கண்டான். மத விஷயமாய் அசோகனுக்கு ஏற்பட்ட மனப்பாங்கும் அவன் ஏற்படுத்திய திட்டங்களும் சண்டை சச்சரவுகளை ஒழித்துச் சமாதானத்தையும் ஒற்றுமையையும் வளர்த்து வந்திருக்கவேண்டுமென்பது தெளிவு. அதுவும் அவன் அந்தரங்கமாக விரும்பிய தம்ம விஜயத்தின் ஒரு பகுதியே.

கலிங்க வெற்றிக்குப் பிறகு போர் புரிவதேயில்லை என்ற அவனது தீர்மானம் அயல்நாடுகளுடன் சமாதானத்தை நிலைநிறுத்தியது. அதே மாதிரி எல்லா மதங்களும் தக்க மரி

யாதை பெற்று ஒன்றையொன்று வெறுக்காது நேசத்துடன் கலந்து வாழ்வதற்காகச் செய்த ஏற்பாடுகள் உள்நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்தின. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் நின்றது அசோகனுடைய கருணை நிரம்பிய மனப்பாங்கே. அவனுடைய கருணையின் அலைகள் மானிட வாழ்க்கையை மட்டுமன்றி உயிர்ப் பிராணிகளனைத்தையும் தழுவி வீசின. பிராணிகளுக்குச் சிகிச்சை செய்யும் சாலைகளைத் தன் ராஜ்யம் முழுவதும் ஏற்படுத்தினான்; அதற்கு வேண்டிய மருந்துச் செடி கொடிகளை ஒவ்வோரிடத்திலும் பயிரிடச் செய்தான்; அதே மாதிரியாகத் தனக்கு நேசமான அரசர்கள் ஆண்டுவரும் அயல்நாடுகளிலும் சிகிச்சைசாலைகளும் மூலிகைத் தோட்டங்களும் ஏற்படும்படி செய்தான்.

அசோகனுடைய ஜீவகாருணியம் அவன் உண்டுபண்ணிய வேறு பல திட்டங்களாலும் வெளியாகிறது. தன் அரண்மனையில் போஜன சாலைக்காகக் கொல்லப்படும் பிராணிகளின் சங்கியையைப் படிப்படியாய்க் குறைத்துக் கடைசியாய் அபிஷேகத்தினின்றும் பதின்மூன்றுவது வருஷத்திற்குப் பிறகு, அதாவது கி. மு. 252 முதல் தன் போஜனத்திற்காக ஒரு பிராணியையுமே கொல்லக்கூடாதென்று கட்டளையிட்டான். யாகங்களிலும் 'உத்ஸவ சமாஜ'ங்களிலும் பிராணிகள் கொல்லப்படுவதைத் தடுத்தான். பிராணிகளை வேட்டையாடப் போவது அரசர்களுக்கு வழக்கமானது; அந்த வழக்கத்தை அவன் அடியோடு நிறுத்தினான். உயிர்ப் பிராணிகளைக் கொல்வது, ஆடு மாடுகளை விதையடிப்பது, சூடு போடுவது, மீன் பிடித்து விற்பது முதலிய காரியங்களை எல்லாம் அறவே நிறுத்த முடியாதபோதிலும், பல சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே நடக்கும்படி விதித்தான்; முக்கியமாய் இக்காரியங்களெல்லாம் புண்ணிய தினங்களில் நடக்கக்கூடாதென்று விதித்து எந்த எந்தத் தினங்கள் புண்ணிய தினங்கள் என்பதற்கு நீண்டதோர் அட்டவணையையும் பிரசுரப்படுத்தினான். இந்த நுணுகிய சட்டங்களையெல்லாம் ஜனங்களை அனுசரிக்கச் செய்வதற்கு வேண்டிய அதிகாரிகள் பலவிடத்தும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் முதலில் தொந்தரவாகத் தோன்றியிருப்பினும் நாளடைவில் ஜனங்களால் மனமார ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும்.

ஆகவே, அசோகன் தர்மத்தையும் அஹிம்ஸையையும் காருணியத்தையும் பூர்ணமாகக் கைக்கொண்டதனால், அவன் ஆண்ட நாடுகளிலும் பிற நாடுகளிலுங்கூட வசித்துவந்த மனிதர்களுக்கும் மற்ற உயிர்ப் பிராணிகளுக்கும் பெருத்த நன்மை விளைந்தது. ஆனால், நம் நாட்டுச் சரித்திர ஆசிரியர் சிலர் அசோகன் யுத்த முறையைக் கைவிட்டதால் மௌரிய சாம்ராஜ்யம் சீர்குலைந்து அழியும்படி செய்துவிட்டானென்று அவன்மீது பழி கூறுகிறார்கள். இது, அசோகன் செய்த தர்ம காரியங்களின் மேன்மையை அவர்கள் நன்றாக உணராததனாலோ, புராதன இந்தியாவும் தற்கால ஜெர்மனியைப்போல் ஆகக்கூடிய சந்தர்ப்பத்தைத் தொலைத்துவிட்டான் அசோகன் என்ற வருத்தத்தாலோ தெரியவில்லை. எவ்விதமாயினும், அசோகனே அவர்கள் வாதத்திற்கு மறுமொழி கூறியிருக்கிறான்: 'பாவம் செய்வது எளிது' என்கிறான் ஒரு சாஸனத்தில். மேலும், தன் வாழ்நாள் முழுவதையும் யுத்தத்திலேயே செலவிட்டான் முகலாய சக்கரவர்த்தி அவுரங்கசீப்; அவனுடைய சாம்ராஜ்யம் வேரூன்றி நிலைநின்றதா? தற்கால உலக நிலையில் அசோகன் சரித்திரத்தால் நாம் உணரக் கூடிய உண்மை இதுவே: அசோகன் செய்தது தவறாயின், உலகத்தாரெல்லோரும் அதே மாதிரித் தவறு செய்தால் அதுவே உலகம் உய்யும் வழியாக முடியும். அதுதான் தர்ம வழி; இந்தியர்களுக்கு உரித்தான வழியும் அதுவே.